## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

**தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலில்**

**கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர்**

**விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்.**

**பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு.**

நடைபெறவிருக்கும் தமிழ்நாடு – புதுச்சேரி மாநில சட்டப் பேரவை பொதுத்தேர்தலுக்கு கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் **20–2–2026 வெள்ளிக்கிழமை முதல் 2–3–2026 திங்கட்கிழமை வரை** தலைமைக் கழகத்தில் விண்ணப்பித்திட வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு – புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தொகுதிக்கான விண்ணப்பக் கட்டணம் :**

| | |
|---|---|
| பொதுத் தொகுதி | ரூ. 25,000/– |
| மகளிர்க்கும் மற்றும் தனித் தொகுதிக்கும் | ரூ. 15,000/– |

குறிப்பு : *வேட்பாளராக போட்டியிட விண்ணப்பித்தவர்கள் கூட்டணியின் தோழமைக் கட்சிகளுக்கென பகிர்ந்து கொள்ளப்பட்ட தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பித்திருப்பின் அவர்களது விண்ணப்பக் கட்டணம் பின்னர் திருப்பித் தரப்படும்.*

*விண்ணப்பபடிவம் தலைமைக் கழகத்தில் ரூ..1,000/– வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.*

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 18–02–2026.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில், நீதிக்கட்சி வரலாறு, தந்தை பெரியார் சிந்தனைத் தொகுப்பு, அறிஞர் அண்ணா சிந்தனைத் தொகுப்பு, திராவிட இயக்க பெண் சிந்தனையாளர்கள் தொகுப்பு, திராவிட இயக்கமும் சமூக பண்பாட்டு பொருளாதார மாற்றங்களும், திராவிட இயக்கச் சிறுகதைகள்2 தொகுப்புகள் ஆகிய திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, திராவிடக் களஞ்சியத்தின் பொது பதிப்பாசிரியர் மூ.அப்பணசாமி மற்றும் நூல்களின் பதிப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில்

# திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, பிப். 20 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில், நீதிக்கட்சி வரலாறு, தந்தை பெரியார் சிந்தனைத் தொகுப்பு, அறிஞர் அண்ணா சிந்தனைத் தொகுப்பு, திராவிட இயக்க பெண் சிந்தனையாளர்கள் தொகுப்பு, திராவிட இயக்கமும் சமூக பண்பாட்டு பொருளாதார மாற்றங்களும், திராவிட இயக்கச் சிறுகதைகள்-2 தொகுப்புகள் ஆகிய திராவிடக் களஞ்சியத்தின் 7 புத்தகங்களை வெளியிட்டார்.**

**திராவிடக் களஞ்சியம் திட்ட விளக்கம்**

'திராவிடம்' என்ற சொல் கடந்த இரு நூற்றாண்டு காலமாக மானிடவியல், மொழியியல், வரலாறு, பண்பாட்டு ஆய்வு ஆகிய களங்களில் தெற்காசியாவில் வாழும் ஒரு மக்கள் இனம், மொழிக் குடும்பம், பண்பாட்டுக் குழுமத்தைச் சுட்டிக் காட்டவும், இக்காலத் தமிழ்நாட்டு மக்களிடையே வளர்ச்சி அடைந்து செல்வாக்குச் செலுத்தும் சமுதாய விடுதலை இயக்கத்தின் கருத்துநிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

அறிவுத் துறையில், களஞ்சியம் என்ற சொல் ஒரு பொருள் அல்லது பல பொருள் குறித்து பல அறிஞர்களின் எழுத்துகளைத் தொகுப்பாகக் கொண்டிருக்கும் நோக்கு நூல் படைப்பு (A REFERENCE WORK OR COMPENDIUM PROVIDING SUMMARIES OF KNOWLEDGE EITHER GENERAL OR SPECIAL TO A PARTICULAR FIELD OR DISCIPLINE) எனப் பொருள் கூறப்படுகின்றது. 'திராவிடக் களஞ்சியம்' என்பது, திராவிடச் சிந்தனை பற்றிய அறிவுக் களஞ்சியத் தொகுப்பு, திராவிட இயக்க ஆக்கங்களின் தொகுப்பு, திராவிடம் பற்றிய ஆய்வுகளின் தொகுப்பும் ஆகும்.

அண்மைக்கால அகழ்வாய்வு முடிவுகள் திராவிடப் பண்பாட்டின் தொன்மை தொடர்ச்சி குறித்து அறிவியல் பூர்வமான முடிவுகளை வழங்கி வரும் நிலையில் திராவிடக் களஞ்சியத் தொகுப்புகள் வெளிவருவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். திராவிடப் பண்பாட்டின் தொன்மை என்பது தமிழ் மொழி வரலாற்றின் தொன்மையுமாகும். இந்த நெடும் வரலாற்றில் பண்பாட்டுப் படையெடுப்புகளையும் எதிர்கொண்டே வந்திருக்கிறது. இதன் தொடர்பில் உருவானதே திராவிட இயக்கம் ஆகும்.

திராவிட இயக்க வளர்ச்சி என்பது நமது முன்னேற்றத்தின் ஒரு அங்கமாகும். இத்தகைய நெடிய திராவிட பண்பாட்டின் வளர்ச்சி குறித்தும் திராவிட இயக்கம் குறித்தும், அனைத்து கருத்துகளையும் மாற்றங்களையும் களஞ்சியமாகத் தொகுத்து ஆவணப்படுத்துவதே திராவிடக் களஞ்சியம் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திராவிடக் களஞ்சியம் பொதுமக்கள் அறிவுத் தேவையின் பொருட்டுத் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. திராவிட இயக்கத்தின் கருத்தியல்கள், படைப்பு வளம் குறித்த ஆய்வுகளில் வல்லமை பெற்ற வல்லுநர்கள் குழுவைக் கொண்டு இந்த பணி கடந்த மூன்றாண்டுகளாக நடந்து வருகிறது.

**திராவிடக்களஞ்சியத்தின் 7 புத்தகங்களின் தொகுப்புகளை வெளியிடுதல்**

அந்த வகையில், 13 திரட்டுகளாகத் திட்டமிட்டுள்ள இப்பணியில் முதற்கட்டமாக, நூலாசிரியர் க.திருநாவுக்கரசு அவர்களின் நீதிக்கட்சி வரலாறு, பதிப்பாசிரியர்கள் – புனிதப் பாண்டியன் அவர்களின் தந்தை பெரியார் சிந்தனைத் தொகுப்பு, வீ.எம்.எஸ்.சுபகுணராஜன் அவர்களின் அறிஞர் அண்ணா சிந்தனைத் தொகுப்பு, முனைவர் எஸ். ஆனந்தி அவர்களின் திராவிட இயக்க பெண் சிந்தனையாளர்கள் தொகுப்பு, பேரா.சுப.வீரபாண்டியன் அவர்களின் திராவிட இயக்கமும் சமூக பண்பாட்டு பொருளாதார மாற்றங்களும், பேரா.ந.இளங்கோ அவர்களின் திராவிட இயக்கச் சிறுகதைகள், பேரா. ஹாஜாகனி அவர்களின் திராவிட இயக்கக் கவிதைகள் ஆகிய 7 தொகுப்புகளை தமிழ்நாடு முதலமைசர் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் பி. சந்திரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, திராவிடக் களஞ்சியத்தின் பொது பதிப்பாசிரியர் மூ.அப்பணசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஒன்றிய அரசின் நெருக்கடிகளிலிருந்துமீள ஒரே மருந்து மாநில சுயாட்சிதான்!

## முதல்வர் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே ஒன்றிய அரசிடம் போராடிப் பெற வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறோம். ஒன்றிய நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் பகிரப்படும் நிதியானது, தொடர்ந்து செம்மையான முன்னெடுப்பு நடவடிக்கைகளால் பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள மாநிலங்களின் பங்களிப்பிற்கு ஈடாக அல்லாமல் குறைவாகப் பகி ரப்படுகிறது.

**நீதியரசர் குரியன் ஜோசப் குழு அறிக்கை!**

இதனையடுத்துதான், இத்தகைய இக்கட்டான சூழலில், கூட்டாட்சிக் கருத்தியலை வலியுறுத்தும் வகையிலும், ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகளை, கொள்கைகளை மேம்படுத்திடவும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிக்கூறுகள், நடைமுறையிலுள்ள சட்டங்கள், ஆணைகள் ஆகியவற்றை அனைத்து நிலைகளிலும் ஆராய்ந்து மதிப்பீடு செய்திடவும் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரைச் செய்திடவும் உயர்மட்ட அளவிலான குழு ஒன்றினை அமைப்பது என தமிழ்நாடு அரசு முடிவெடுத்தது.

இப்படி உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப் அவர்களைத் தலைவராகவும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தருமான அசோக் வர்தன் ஷெட்டி அவர்களையும், தமிழ்நாடு மாநில திட்டக்குழு மேனாள் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை கடந்த 16ஆம் நாள் என்னிடம் வழங்கியது.

பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக பேரவை உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசுக்கும் நான் சொல்லிக் கொள்வது, "மாநில சுயாட்சி வேண்டும்; ஒன்றியத்தில் கூட்டாட்சி மலர வேண்டும்!" (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இது தனிப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல; இந்திய நாட்டு மக்களின் வாழ்வியலுக்கும், வளர்ச்சிக்கும் முக்கியமான கோரிக்கை! கூட்டாட்சி என்பது வாழ்வியல் உணர்வு! பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சிதான் அடிப்படை! இதைத்தான் அந்த அறிக்கையும் நிறுவு கிறது. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசமைப்புச் சட்டத்தை நாம் மாற்ற வேண்டும்.

**மீண்டும் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியும்!**

1994இல் எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், "கூட்டாட்சி என்பது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதி" என்று சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய கூட்டாட்சிக் கோட்பாட்டை அரசமைப்புச் சட்டத்தின் பண்பாடாகச் சேர்க்க வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டத் திருத்தமும், சீர்திருத்தமும் தேவை. கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. எனவே, நாம் முயன்றால் மீண்டும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை திருத்த முடியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றுவதற்கான முயற்சிகளை நாம் தொடங்கியாக வேண்டும். அதிகாரமும், வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது. அவை பரவலாக்கப்பட வேண்டும். அதற்கான சட்டபூர்வமான வழிகளை இந்த அறிக்கை நமக்கு வழங்கி இருக்கிறது. கூட்டாட்சித் தன்மை கொண்டதாக இந்திய அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவது இந்திய ஒன்றியத்தைப் பலவீனப்படுத்தாது என்று இந்த அறிக்கை கூறுகிறது. அனைத்து அதிகாரங்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு கபளீகரம் செய்யும் சூழலில், ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளைச் செயல்படவிடாமல் தடுக்கும் நிலையில், இந்தித் திணிப்பின் மூலமாக, நிதி நெருக்கடிகளின் மூலமாக, தொகுதி மறுவரையறை என்ற சதியால், ஜி.எஸ்.டி.யால் தமிழ்நாடு அனு பவித்து வரும் நெருக்கடிகளில் இருந்து மீள ஒரே மருந்து மாநில சுயாட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலமாக மட்டுமே அடைய முடியும்.

**அனைத்து அரசியல் இயக்கங்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பிவைக்கப்படும்!**

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இந்தக் கொள்கைக்கான வலிமையான ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயகச் சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள்; எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார்கள், அவர்களை ஒன்று திரட்ட வேண்டும். எனவே, இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் இயக்கங்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றிய அரசும், மாநிலங்களும் போட்டியாளர்கள் அல்ல; இருவரும் பொதுவான ஒரு அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் ஒட்டுமொத்த இந்தியாவும் வளர முடியும் என்பதை ஒன்றிய அரசுக்கு உணர்த்துவோம். இப்படிப்பட்ட பின்னணியில்தான், நமது குடியரசின் அரசமைப்புச் சட்டத்தின் உயிர்ப்பைத் தீர்மானிக்கும் முக்கியமான தருணத்தில் நாம் நிற்கிறோம். நாம் இது வரை பயணித்த பாதையை மீளாய்வு செய்து, உண்மையான கூட்டாட்சிக் கருத்தியல் வலுப்பெறும் வகையில் நமது எதிர்காலத்தை வடிவமைக்க வேண்டிய நேரம் இது. இதற்கு சட்டபூர்வ வழிமுறைகளை ஆராய்ந்து, முதற்கட்ட அறிக்கையை வழங்கிய மாண்பமை உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் திருமிகு குரியன் ஜோசப், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திருமிகு அசோக் வர்தன் ஷெட்டி, பேராசிரியர் மு.நாகநாதன் ஆகி யோருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிக்கையை தற்போது இந்த மாமன்றத்தின் மேலான பார்வைக்கு இப்போது வைக்கிறோம். இந்தியாவின் ஒற்றுமை - ஒருமைப்பாடு பன்முகத் தன்மை - மக்களாட்சிப் பொறுப்புணர்வு அரசமைப்புச் சட்ட ஒழுங்குமுறை ஆகியவற்றோடு, முதிர்ச்சி பெற்ற கூட்டாட்சி நாடுகளின் சிறந்த நடைமுறைகளையும் உள்ளடக்கித் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அறிக்கையை அனைவரும் திறந்த மனத்துடன் ஏற்று, அறிவார்ந்த விவாதங்களை நடத்தி செழுமைப்படுத்த வேண்டும். ஒன்றியமாநில உறவுகளில் சமநிலையை மீட்டெடுக்க வேண்டும்.

மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் ஒன்றிய அரசு வலுவாக இருக்கும். மாநிலங்களால்தான் நாட்டுக்கு வளர்ச்சியும், பெருமையும்! கூட்டாட்சிக் கருத்தியல் என்பது மாநிலங்களுக்கான சலுகை அல்ல; நாட்டிற்கான பாதுகாப்பு அரண். இதையெல்லாம் ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும்.

**கொட்டக் கொட்டக் குனியக் கூடியவர்கள் அல்ல நாம்!**

கொட்டக் கொட்டக் குனியக்கூடியவர்கள் அல்ல நாம்; (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் உயிலுக்கு உயிர்கொடுப்போம்; தலைவர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கத்தை நிறைவேற்றிக் காட்டுவோம்; நாம் தான் இதைச் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்மைவிட்டால் இதைச் செய்ய யாருமில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நாம் தான் இதைச் செய்ய வேண்டும். நம்மை விட்டால் இதைச் செய்ய யாருமில்லை. இது வரலாறு வழங்கியிருக்கக்கூடிய வாய்ப்பு. மலர்க மாநில சுயாட்சி! உருவாகட்டும் இந்தியக் கூட்டாட்சி!

பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியமாநில உறவுகள் குறித்த உயர் நிலைக் குழுவின் அறிக்கை தொகுதி 1, 16.2.2026 அன்று அரசிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நகலை தங்களின் அனுமதியோடு உறுப்பினர்களுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### சுற்றுலா துறை சார்பில்

# முதலீட்டாளர்களுக்கு உதவ சுற்றுலா செயல்முறை மையம்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தகவல்!

சென்னை, பிப். 20 -

சுற்றுலா துறை சார்பில் முதலீட்டாளர்களுக்கு உதவ சுற்றுலா செயல்முறை மையம் அமைக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி குறிப்பு வருமாறு:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு உலக சுற்றுலா உச்சி மாநாடு 2026 மூலம் கிடைத்த பெரும் முதலீட்டு வாய்ப்புகளை விரைவாக செயல்படுத்தவும், முதலீட்டாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கவும் சுற்றுலா செயல்முறை மையம் (TOURISM FACILITATION CELL) அமைக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா செயல்முறை மையம்** (TOURISM FACILITATION CELL)

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023-ன் முக்கிய நோக்கம், மாநிலத்தில் தனியார் முதலீடுகளை ஊக்குவித்து சுற்றுலாத்துறையை விரைவாக வளர்ச்சியடையச் செய்வதாகும்.

வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ்நாடு உலக சுற்றுலா உச்சி மாநாடு 2026 மூலம் மாநிலத்திற்கு ரூபாய் 22,795 கோடி மதிப்பிலான முதலீடுகளை உள்ளடக்கிய 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக முதலீட்டாளர்களுக்கு விரைவான சேவைகளை வழங்குவதில் சுற்றுலா செயல்முறை மையம் (TOURISM




FACILITATION CELL) மிக முக்கிய பங்காற்றும்.

**இந்த சுற்றுலா செயல்முறை மையம் சுற்றுலா ஆணையர் அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்களுடன் செயல்படும்;**

1. இணை இயக்குநர், சுற்றுலாத் துறை,
2. பொது மேலாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்,
3. உதவி சுற்றுலா அலுவலர் நிலை -2
4. தமிழ்நாடு வழிகாட்டுதல் நிறுவனத்தின் உறுப்பினர்.

ஒருங்கிணைந்த ஒற்றை சாளர அனுமதி (SINGLE WINDOW CLEARANCE)

தமிழ்நாடு அரசின் நிறுவனமான GUIDANCE TAMIL NADU மூலம் செயல்படும் SINGLE WINDOW PORTAL, தனியார் திட்டங்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் பெறுவதற்கான வசதியை வழங்கும்.

இந்த வசதி மூலம்:

- தேவையான ஆதார ஆவணங்களை ஒரே தளத்தில் சமர்ப்பிக்கலாம்.
- விண்ணப்பதாரர் மற்றும் அதிகாரிகள் இடையிலான தகவல் பரிமாற்றம் எளிதாக்கப்படும்.
- விண்ணப்பத்தின் நிலையை கண்காணிக்க முடியும்.
- காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட முறையில் அனுமதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்யப்படும்.

**சுற்றுலா வசதி ஒருங்கிணைப்பு மையம்** (TOURISM FACILITATION CELL)

- GUIDANCE TAMIL NADU மாநில அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக செயல்படுகிறது. முதலீட்டா ளர் களுக்கு உதவுவதற்காக BIZ BUDDY உதவி மையமும் இயங்கி வருகிறது.
- இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், சுற்று லாத் துறை துறையின் கீழ் TOURISM FACILITATION CELL அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளும்:

- சுற்றுலாத்துறையில் புதிய முதலீடுகளை ஈர்த்தல்.
- மாநிலத்தில் நடைபெற்று வரும் தனியார் / PPP திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு.
- புதிய சந்தைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தேவையான சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்.
- தனியார் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனுமதிகளைப் பெற வழிகாட்டுதல் மற்றும் அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைப்பு.
- மாநில சுற்றுலா வளர்ச்சியைப் பற்றிய காலாண்டு அறிக்கைகளை வெளியிடுதல்.

தமிழ்நாடு உலக சுற்றுலா உச்சி மாநாடு 2026 மூலம் கிடைத்த பெரும் முதலீட்டு வாய்ப்புகளை விரைவாக செயல்படுத்தவும், முதலீட்டாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கவும் TOURISM FACILITATION CELL முக்கிய செயல்முறையாக செயல்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் (18.2.2026) தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 167வது பிறந்தநாளையொட்டி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப்படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (நினைவகங்கள்) தமிழ்செல்வராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.